கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

# CC.No.47/2023

2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 13 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சசிக்குமார் | வயது | 49 |
| தந்தை பெயர் | ஜெயபால் | ஜாதி | |
| தொழில் | நகல் ஆய்வாளர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர். | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

(எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1) நான் தற்போது திருவாரூர் தாலுக்கா, மொச்சக்குடி கிராமத்தில் வசித்து நீதிமன்ற நகல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். அ.சா. 1 புனிதாவை எனக்கு தெரியும். என்னுடன் நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிகிறார் ஆஜர் எதிரியை நான் நீதிமன்றத்தில் நான் சம்பவத்தின் போது பார்த்திருக்கிறேன். சம்பவத்திற்கு முன்பு ஒரு முறை ஆஜர் எதிரி நீதிமன்றத்திற்கு வந்து தலைமை எழுத்தரிடம் பேசிக் கொண்டிருந்தார். கடந்த 19.01.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் நானும், அ.சா 1 ம் அலுவலக பணியில் இருந்த போது ஆஜர் எதிரி நீதிமன்ற அலுவலகத்திற்கு உள்ளே வந்து அ.சா 1 யை பார்த்து தகாத வார்த்தைகள் சொல்லி திட்டி தன் காலில் கிடந்த செருப்பை கழட்டி அ.சா 1 ன் தோள்பட்டையில் அடித்துவிட்டார்.

2) நானும் அங்கிருந்த அலுவலக உதவியாளரான சர்மிளா என்பவரும் இருவரையும் விலக்கி விட்டு ஆஜர் எதிரியை அலுவலகத்தில் இருந்து வெளியே அனுப்பிவிட்டோம். ஆஜர் எதிரி அ.சா 1 யை அடித்தவுடன் அ.சா 1 மயக்க நிலையில் இருந்தார். அருகில் இருந்தவர்கள் அ.சா 1 ன் கணவருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தவுடன் சற்று நேரத்தில் அ.சா 1 ன் கணவர் வந்து மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார். சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நீதிமன்ற அலுவலகத்தில்எத்தனை பேர் பணியாற்றினார்கள் என்றால் 6 பேர் பணியாற்றினார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 5 நபர்கள் இருந்தார்கள். தலைமை எழுத்தர் அப்போது அங்கு இருந்தார் என்றால் சரிதான். நான் அன்றைய தினம் நகல் ஆய்வு பணி செய்து கொண்டிருந்ததேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தது குறித்து நான் நீதித்துறை நடுவரிடம் தெரிவித்தேனா என்றால் நான் கூறவில்லை தலைமை எழுத்தர் கூறினார். 19ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 20ம்தேதிதான் போலிசார் விசாரணை செய்தனர் என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

2) தலைமை எழுத்தர் என்னிடம் நான் பணியில் இருக்கும் போது நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் குறித்து வாக்குமூலம் ஏதேனும் எழுதி வாங்கினாரா என்றால் இல்லை. ஆஜர் எதிரி யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை ஆஜர் எதிரியை அடையாளம் காண்பித்து நடந்த விபரம் குறித்து கேட்டார்களா என்றால் இல்லை. ஆஜர் எதிரிக்கும், அ.சா. 1க்கும் என்ன பிரச்சனை என்று நான் கேட்கவும் இல்லை. தெரிந்து கொள்ளவும் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி என்ன விதமான செருப்பை கொண்டு அ.சா 1 யை தாக்கினார் என்று போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

3) அ.சா 1ன் எந்த பக்க தோள்பட்டையில் தாக்கப்பட்டார் என்பது குறித்து போலிசார் என்னிடம் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. தாக்கியதாக சொல்லப்படும் தடயமான செருப்பை சம்பவ இடத்திலேயே விட்டு சென்றாரா அல்லது எடுத்து சென்றாரா என்று போலிசார் விசாரணை செய்தனரா என்றால் இல்லை. அ.சா 1 என்னுடன் பணியாற்றுபவர் என்பதால் அவருக்கு ஆதரவாக அவருக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு அவர் சொல்லி கொடுத்ததை நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரி அலுவலகத்தினுள் அத்து மீறி நுழையவும் இல்லை, அ.சா 1 புனிதாவை செருப்பால் தாக்கவும் இல்லை என்றால் சரியல்ல. நானும், அ.சா 1 புனிதாவும், அலுவலக ஊழியர்களாக ஒரே சங்கத்தில் தான் இருக்கிறோம் என்றால் சரிதான். அதனால் எனது சங்கத்தின் உறுப்பினருக்கு உதவி செய்யும் நோக்கத்தில் அ.சா 1க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை -இல்லை.**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No. 47/2023

2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 13 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முத்துக்குமார் | வயது | 30 |
| தந்தை பெயர் | நாகேஸ்வரன் | ஜாதி | |
| தொழில் | அலுவலக உதவியாளர், நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர். | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

(எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1) நான் தற்போது ஆணைக்குப்பம், தீபாமங்கலம் தெருவில் வசித்து நீதிமன்ற அலுவலக உதவியாளராக பணிபுரிகிறேன். . அ.சா 1 புனிதாவை எனக்கு தெரியும். அ.சா 1 என்னுடன் நீதிமன்றத்தில் அலுவலகஉதவியாளராக பணிபுரிகிறார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விபரமும் தெரியாது. தேதி ஞாபகம் இல்லை. இன்றிலிருந்து சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் மதியம் 2.00 மணியளவில் திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய போலிசார் சம்பவ இடமான நீதித்துறை நடுவர் நீதிமன்ற அலுவலத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் எங்கள் முன்னிலையில் தயார் செய்தார்கள். அதில் நானும், தட்டச்சர் புனிதா என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம்.

2) நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகசர் அ.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) போலிசார் என்னிடம் எதற்காக கையொப்பம் வாங்குகிறார்கள் என்ற விபரத்தை கூறவில்லை என்றால் சரிதான். தலைமை எழுத்தர் சொன்னதன் பேரில் நான்

கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சொன்ன நாள், சொன்ன நேரத்தில், போலிசார் நீதிமன்ற அலுவலகத்திற்கு வந்து என்னிடம் கையொப்பம்கேட்டார்கள் நான் போட்டேன் என்று தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
**Tiruvarur**.